# வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி

## காயல்பட்டணம்

## <u>பெண்கள் கழக சிறப்புக் கூட்டம்</u>

வாவு வஜீஹா வனிதையர் கல்லூரியல் 22.12.16 அன்று பிற்பகல் 2.00 மணி அளவில் பெண்கள் கழக (Women's Cell) சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. முதலாமாண்டு தமிழ்த்துறை மாணவி S. முத்து பாஹிமா கிராத் ஓத தமிழ்த்தாய் வாழ்த்துடன் கூட்டம் தொடங்கியது. திருமதி சு. ஏஞ்சல் லதா M.A., M.Phil. வரவேற்புரை மற்றும் அறிமுகவுரை ஆற்றினார்.

பாளையக்கோட்டை சாராள் தக்கர் மகளிர் கல்லூரி உணவியல் மற்றும் ஊட்டச்சத்துத் துறைப் பேராசிரியை திருமதி. ஜோ. சிந்தியா ஜீலி B.Sc., PCDAND., M.A., சிறப்பு விருந்தினராக வருகை தந்து "ஆரோக்கியமும் உணவுப் பழக்க வழக்கமும்" என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். புரோட்டினின் முக்கியத்துவம் மற்றும் சரிவிகித உணவு முறை பற்றியும் விளக்கவுரை ஆற்றினார். வணிக நிர்வாகவியல் துறை உதவிப் பேராசிரியை செல்வி த. சாந்தாதேவி MBA., PCP நன்றியுரை ஆற்றினார். முதலாமாண்டு வணிகவியல் துறை மாணவி M.S. பாத்திமா துஆ ஓத, மாணவிகள் நாட்டுப்பண் பாட பெண்கள் கழகச் சிறப்புக் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.